கவிச்சித்தரின்

# குறு நூறு

க.பொ.இளம்வழுதி

# ஆசிரியர் பற்றி...



கவிச்சித்தர்
க. பொ. இளம்வழுதி

இவர் புதுவை மாநிலத்தைச் சார்ந்தவர். 25-4-1938இல் கலித்தீர்த்தான் குப்பத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் பாலசுப்பிரமணியன். "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறநானூற்றுப் பாடலால் ஈர்க்கப்பட்டு "இளம்வழுதி" என்னும் புனைபெயரை ஏற்றவர்.

இவர்தம் பெற்றோர் திருமிகு வே. பொன்னுசாமி, திருமதி தனபாக்கியம். மனைத்துணையாய் இருந்து இலக்கியக்கலை வளர்ப்பவர்கள்-திருமதி கலைவாணி இளம்வழுதி. இளந்திரையன், இளம்பரிதி, இளமதி, இளந்தென்றல் ஆகிய மழலைச் செல்வங்களுடைய இவர்தம் முதற்படைப்பு 'சிவப்பு நிலா'.

முப்பதாண்டுகளாகக் கவிதைத் துறையில் ஈடுபட்டுள்ள இவர், 'எடுத்துக்காட்டு', 'சீர்திருத்தம்', 'கலம்பகம்' ஆகிய கையேடுகளை நடத்தியவர்; பல கவியரங்குகளைக் கண்டவர். ஆண்டவன் அறுபது, பொள்ளாச்சி தந்த புனல் ஆகியவை 'கவிதை'யில் தொடர்ந்து வந்த படைப்பிலக்கியங்கள். இவர்தம் முதல் படைப்புக்கள், உரைநடை புதுவை முரசிலும்-(1954ல்) கவிதை—உவமைக் கவிஞர் சுரதாவின் காவியத்திலும் (1955ல்) வெளியாயின.

மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

# கவிச் சித்தரின்
# குறுநூறு

கவிச்சித்தர்
## க. பொ. இளம்வழுதி

வெளியீடு :
**புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம்**
35, பெரியார் சாலை (கடலூர்ச் சாலை)
புதுச்சேரி-605001.

உரிமை : ஆசிரியர்க்கே

வெளியீடு : புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம்
(6-வது வெளியீடு)

**விலை உரு 10.00**

விற்பனை உரிமை : பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை-600 001.

☐ கவிச்சித்தரின் குறுநூறு [கவிதைகள்]

☐ ஆசிரியர் : கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி

☐ முதற் பதிப்பு : ஜூன் 1983

☐ அச்சுத்தாள் : 11.6 கி. கி.

☐ அச்சகம் : மூவேந்தர் அச்சகம், சென்னை-600 014.

# பதிப்புரை

மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், கவிஞரேறு வாணிதாசன்—இந்த வரிசையில் மற்றும் ஒரு பாவலரை நம் புதுவை மாநிலம் அளித்துள்ளது. அவர்தாம் கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி.

அவர் ஓர் உண்மைப் பாவலர்; தன்மானத் தமிழர். 'மனிதம்' என்னும் இலக்கணத்திற்கு இலக்கியம் ஆவார். புதுமைக் கருத்தும் புரட்சி நோக்கும் கொண்டவர்; ஆயினும் மரபு பிறழாதவர். இயற்கையை நுகர்ந்து, அதிலும் மானுட நிலைகளை எண்ணிப் பார்ப்பவர்.

அவர்தம் "சிவப்பு நிலா" இந்நாளில் தமிழில் காவியம் படைக்கப்படவில்லை என்ற குறையைப் போக்க எழுந்த ஓர் ஒப்பற்ற காப்பியம். அதனை இலக்கியப் புரவலர் உ. பலராமன் அவர்கள், சென்னை இளங்கோ இலக்கிய மன்றத்தின் மூலம் வெளியிட்டுப் பெருமையைத் தட்டிக் கொள்வதில் முந்திக் கொண்டார்.

கவிச் சித்தரின் "குறுநூறு" என்னும் இச் சிந்தனைக் களஞ்சியத்தைப் புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம் தன் ஆறுவது வெளியீடாகப் படைத்து மகிழ்கிறது.

இந்நூலை வெளியிட இசைவு தந்த கவிச் சித்தருக்கு மன்றம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டிற்கு எல்லா வகையிலும் துணை நின்ற யாவர்க்கும் மன்றம் நன்றியினை உரித்தாக்குகின்றது.

புதுச்சேரி
5-6-1983

**புதுவைத் தமிழ்க் கவிஞர்**
மன்றம்

பேராசிரியர் டாக்டர் மா நன்னன், "குறளகம்"
எம்.ஏ., பிஎச்.டி., சென்னை-600 001.
தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

# அணிந்துரை

கவிச் சித்தர் க. பொ. இளம்வழுதி அவர்களால் இயற்றப்பட்ட குறுகிய நூறு பாக்களாலான குறுநூறு எனும் சிறு நூலைப் படித்து மகிழ்ந்தேன். இச்சிறு நூல் அருங்கலச் செப்புகள் நூறு கொண்ட பெருங்கலப் பேழையாகத் திகழ்கிறது. ஒவ்வொரு செப்பையும் முடிந்த அளவு திறந்து பார்த்தால் அவற்றுள் வடிவழகு ததும்பும் உயிர் ஓவியங்கள் சிரிப்பதனைக் காணலாம். அவ்வாறு நான் திறந்து, கண்டு, மகிழ்ந்த செப்புகள் 1, 4, 5, 8, 17, 23, 32, 59, 98, 100 என்னும் எண் கொண்டவையாகும்.

ஆனால் எல்லாச் செப்புகளையும் எல்லோரும் திறந்து கண்டு மகிழ முடியுமா? என்னால் எளிமையாகத் திறக்க முடியாத செப்புகள் எனப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம். அவை 13, 27, 63, 64, 78, 85 எண் கொண்டனவாகும்.

செப்பு 19-இல் மனைவியைச் 'சொர்க்கம் என்பதன் சுருக்கம்' எனப் புனைகிறார் பாவலர். இவர் திருமணம் ஆனவர் என அறிகிறேன். இருந்தும் இவ்வாறு கூறுவதன் காரணம் எனக்கு விளங்கவில்லை. 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்று கூறத் தகும் நிலையில் உள்ளது சொர்க்கம் என்பார்கள். இருப்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே 'எட்டாத கனிக்குக் கொட்டாவி விடுவதாக அமைகிறது சொர்க்கம் விரும்புவோரின் வேணவா. ஔவையார், அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் விடுதலே பேரின்ப வீடு என்று கூறியிருக்கிறார். இம் மூன்றையும் அறிந்து இல்லறத்தை நல்லறமாக நடத்தும் யாரும் இப்பாவலரின் இக்கருத்தைப் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே, இதனையும் திறக்க முடியாத செப்பாகவே நான் கருதுகிறேன்.

பாவலரின் கற்பனையும், சொற்செட்டும், வடிவமைப்பும், நுண்பொருள் விளக்கமும், விழுமிய உவமையும் உள்ளம் உவந்து பாராட்டத்தக்கனவாகும். பாவலரின் முயற்சி வெல்க, வாழ்க!

தங்கள் அன்புள்ள,

**மா. நன்னன்**

# பாயிரம்

## பயிர்காக்கும் வான்

### கவிஞர் கல்லாடன்

அன்பில் மலர்ப்பொய்கை; ஆன்ற திருவுள்ளம்!
நண்பில் பிசிராந்தை; நல்ல பெரும்வழுதி!
பண்பில் சிகரம்; அவன் பார்வை அருள்சுரக்கும்!
மீசை முறுக்குடையான்; வீரம் மிகவுடையான்!
ஆசான்பா வேந்தன் அரிய நெறி நின்ற
தாசன் கவிவாணி நெஞ்சில் நிலைத்த கவி!

நேர்வகிடு நெஞ்சத்து நேர்மை தனைக்காட்டும்!
கூரிய நாசிஅவன் கூர்த்தமதி காட்டும்!
பரந்தநெற்றி அன்னோன் பரந்தமனம் காட்டும்!
அரிய செயல்காட்டும் அன்னோன் திருக்கைகள்!
வெற்றி தனைக்காட்டும் வீரத் தமிழ்நடையே!
பற்றெல்லாம் தண்டமிழ்மேல்; பாசம் தமிழ்க்கவிமேல்!

அந்நாள் முடிவேந்தர் ஆன்ற புலவர்களைப்
பொன்னேபோற் போற்றிப் புகழ்சேர்த் ததைப்போல்
இந்நாளில் க. பொ. இளம்வழுதி! என்றன்
உளங்கவர்ந்த மேலோன், உயிராம் தமிழ்க்கே
உயிரீயும் செம்மலவன், ஒப்பில்பண் பாளன்;
பயிர்காக்கும் வான்போல் பழகுதமிழ் காப்பவனும்!

தென்னிலங்கை மன்னன்போல் தன்மானம்
மிக்குடையோன்!
தன்னலமே பாரான்; தமிழன் தகை சான்றோன்!
எந்நாளும் மற்றவர்கள் ஏற்றம் நினைப்பவன் காண்!
தன்புகழை எண்ணாதான்; தக்கார் புகழ்சொல்வோன்!
இன்கவிதைக் காவலன்; ஈடில் கவிச்சித்தன்!
மன்பதை உய்வதற்கு வாய்த்த குறுநூற்றை
இன்பமுடன் ஈந்தான் இவண்.

# என் உரை

கவிதை!

தொட்டில் கவிஞர்களுக்குப் புட்டிப் பால்!

மரபு கவிஞர்களைப் புரக்கும் பிரபு!!

ஊட்டம் குறைந்தாலும் ஓட்டம் சுணங்காமல்

தன் இலக்கை நோக்கிச் சுழலும் இலக்கியச் சூரியன்!

ஏட்டுத்துறையிலும், பாட்டுத்துறையிலும் ஓட்டாரமாக ஊதியங் கருதாது உழைக்கும், ஒற்றை நாடிப் பாவலருக்கு உதவும் எண்ணத்தோடு எழுதப்பட்டதே குறுநூறு. இந்த எளிய முயற்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்த கவிதைக் காவலர் தெசிணி பி. காம். (ஆனர்சு) பி. எல். அவர்கட்கு எனது நன்றி.

தங்கள் மண்ணில் பிறந்தவன், என்ற உரிமையுணர்வோடும், உள்ளன்போடும் குறுநூறு பாக்களை நூலாக்கி வெளியிட முன்வந்த புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றத்தாரின் செயலை-நான் மன நெகிழ்வோடு பாராட்டுகின்றேன்.

இலக்கியப் போர்வையில் அரசியல் ஆதாயம் தேடாத அமைப்பின் சொந்தக்காரர்களான அம்மன்றத்தின் தலைவர் கவிஞர் புதுவை செல்வம், துணைத்தலைவர் கவிஞர் கல்லாடன் பி. ஏ; செயலர் திரு சு. வேல்முருகன். எம். ஏ; பி. எட்; பொருளாளர் பாவலர் இலக்கியன்; இலக்கியச் சோலை அமைப்பாளர் புலவர் திரு கி. அரியரன் பி. லிட்; வாணிதாசனார் இளைஞர் நற்பணி மன்றத் தலைவர் புலவர் திரு வ. கலியபெருமாள் பி. லிட்; பி. எட்; புதுவைத் தமிழ்க் கழகத் தலைவர் திரு சி. நாகலிங்கம் ஆகிய நல்லோர்கட்கென்றன் நன்றி!

இலக்கியப் புலவர் திரு உ. பலராமன்!

புழுக்க அரசியலில் ஒரு பூங்கா!

இலக்கியக் காட்டில் இறங்கிய கோடை மழை!

சிவப்பு நிலாவுக்குக் கிடைத்த நீலவானம்!

எத்தனை இலக்கியக் குடும்பங்களின்

அடையாள அட்டைகள் இவர் பெயரில் எழுதப் பட்டிருக் கின்றன! இந்த காவிரிக் கழனிக்கு என் நன்றி!

நல்ல நண்பர்களின் உதவியும், ஒத்துழைப்புமின்றி எந்தத் தனி மனிதனும் சிறப்பைப் பெற்று விடுவதில்லை. எனது நண்பர்கள் கடலூர் மா. சுதர்சனம், கலி தீர்த்தான் குப்பம் டாக்டர் ந. கார்த்திகேயன். பி. வி. எஸ். சி. கடலூர் துறைமுகம் மு. குப்புசாமி இளவல்கள் மு. நாக சுந்தரம், மு. பாண்டுரங்கன், எங்கள் சங்கத் தலைவர் திரு மு· தனராஜ், செயற்றிறம் மிக்க பொன். நடராசன், சென்னை இளங்கோ இலக்கிய மன்றச் செயலர் கவிஞர் செ. பார்த்த சாரதி, சுகாதார உதவியாளர்கள் சங்க மாநிலச் செயலர் திரு பக்கிரி முகமது, ஊ.வ. துறை பணியாளர்கள்கூட்டுறவு கடன் சங்கச் செயலர் திரு பா. வெங்கடேசன் - தென் னார்க்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றத்தின் முன்னாள், இந்நாள் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள்- அனைவருக்கும் நான் நன்றிக்கடன் பட்டவன்.

கவிஞர்கள் நன்றி யுடையவர்களாக வாழ்வது, அவர் கள் எழுதுவதை விடவும் அவசியமானது. கவிஞரேறு வாணி தாசன் அவர்களின் நற்பண்புகளை கவிஞர்கள் அறிந்து, உணர்ந்து வாழ்தலே அவர்கள் நாட்டுக்கும் மொழிக்கும் செய்யும் தொண்டாகும்.

எனது இந்த நூலும் எனது பெற்றோர்களுக்கே காணிக்கை!

நன்றியுடன்

**க. பொ. இளம்வழுதி**

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| i | இயற்கை | ... | 9 |
| ii | மானிடவியல் | ... | 15 |
| iii | உறுப்பியல் | ... | 19 |
| iv | சமூகவியல் | ... | 22 |
| v | அரசியல் | ... | 26 |
| vi | தாவரவியல் | ... | 33 |
| vii | அறிவியல் | ... | 37 |
| viii | விலங்கியல் | ... | 40 |
| ix | பொதுவியல் | ... | 43 |




## 1. பரிதி

நித்தம் பிறக்கும்;
செத்தும் கொடுக்கும்;
மொத்தக் கணக்கில்
மூச்சோ டிருக்கும்!

## 2. நிலவு

நீல வான
நெற்றிச் சந்தனம்!
கோல இரவின்
குளிர்ச்சிக் கோளம்!

## 3. விண்மீன்

நீலவான் குளத்து
நித்திலப் பூக்கள்;
கோலம் காட்டும்
குருட்டுப் பகலே!

## 4. மின்னல்

மேகச் சிரிப்பு;
மென்னொளி வான்நதி;
நாக நெளிவு;
நடன முத்திரை!

## 5. காற்று

புறத்தே திரிந்தும்
அகத்தே நிறைந்தும்
திறத்தா லுயர்ந்தும்
தெரியா திருப்பதே!

## 6 மழை

அவிழ்ந்து சரிந்த
அம்முகிற் கூந்தல்!
கவிழ்ந்த வானக்
கண்ணீர்ப் பெருக்கே!

## 7. மலை

மண்ணின் புடைப்பு;
மரங்களின் மச்சு;
விண்முகி லிறங்கும்
விமானத் தளமே!

## 8. நதிகள்

வெள்ள விரியன்;
விரைந்த தடங்கள்!
துள்ளுங் கயல்செல்
தொடர்நீ ருந்துகள்!

## 9. கடல்

அழுக்கை வாங்கி
அதையே உப்பாய்க்
கொழுக்கக் கொடுத்துக்
குரைத்துக் கிடப்பதே!

## 10. அலைகள்

குதித்து நுரைத்துக்
குரைத்துக் கரையை
எதிர்க்கும் அலைக்கிங்
கென்னதான் பகையோ?

## 11. முத்து

சிப்பியின் சினையுள்
உப்பிய கற்கள்!
செப்பித ழுள்ளே
சிரித்திடும் பற்கள்!

12. மணல்

மலைப்பூ மகரந்தம்!
மழைநீர் மஞ்சம்!
விலைபெறு கட்டட
விளைச்சல் கலப்(பு)உரம்!

13 அந்தி

பகலின் முதுமை!
பரிதியின் தோல்வி!
இகலிரா வாகை!
இருட்டின் முகவுரை!

14. பனி

மண்மகள் பசலை
மௌனப் புன்னகை!
வெண்முகில் விடியலில்
விலகும் போர்வை!

## 15. இருட்டு

இதழ்கள் சிவக்க
இருபால் கலக்க
உதவும் இயற்கை
ஒழுக்கச் சட்டம்!

## 16. விடியல்

ஆட்சி மாற்றம்
அரும்பும் வேளை!
காட்சிக் கண்மலர்
பூத்திடும் காலை!




## 17. மாந்தன்

நகத்தின் அழுக்கை
நறுக்கி அகற்றி
அகத்தின் அழுக்கை
அறிவால் மறைப்பவன்!

## 18. திருமணம்

கதிரும் மதியும்
கலந்திடும் சடங்கு!
புதிய உறவின்
பொது அறிமுகமே!

## 19. மனைவி

சொர்க்கம் என்பதன்
சுருக்கம்! ஆண்கள்
வர்க்கம் வளர்ந்திட
வாய்த்தநற் றுணையே!

## 20. தாய்மை

உலகப் பொதுமை
உணர்வுப் பெருக்காம்!
விலகா அன்பு
விதைக்க ளஞ்சியமே!

## 21. குழந்தை

விந்து விளைச்சல்!
விடியல் தாமரை!
பந்தப் பதிப்பில்
வந்த கவிதை!

## 22. மழலை

தாய்மொழி தழுவிய
தத்தைத் தனிமொழி!
சேய்வாய் மலர்தரும்
செந்தேன் ஊற்றே!

## 23. முத்தம்

படுக்கைக் காவியப்
பாயிரப் பாடல்!
கொடுக்கக் குறையாக்
குறுந்தொகை இன்பம்!

## 24. மங்கை

கொங்கை, கூர்விழி
கொடி,படை யென்றால்
அங்கம் அனைத்தும்
ஆயுதக் கிடங்கே!

## 25. அழுகை

நெஞ்சப் புண்ணின்
நெருடல் அதிர்வு!
அஞ்சுநீர்க் * குண்டே!
அரிவையர் ஆயுதம்!

## 26. சிரிப்பு

அழகின் முகவுரை!
அன்பின் விளம்பரம்!
பழகினோர் முன்னே
பளிச்சிடும் அறிமுகம்!

*Hydrogen bomb.




27 கண்

ஐம்புல அர்ச்சுனன்
அகமொழி எழுத்து!
பைம் பொழில் வண்டு
பார்வைக் குண்டுகள்!

28. மூக்கு

முகத்துறு கூம்பு!
மூச்சுக் கண்மாய்!
இகழும் சினத்தின்
இருக்கை மூக்கே!

## 29. மீசை

உதட்டின் கூரை!
ஒரு பால் வேற்றுமை!
மதகு மூக் கடியில்
மண்டிய கோரை!

## 30. தாடி

முகத்தேன் கூடு!
முடி சல்லி வேர்கள்!
அகம்வெளுத் தார்க்கோர்
அடையாளச் சின்னம்

## 31. வழுக்கை

உலவும் நிலவே
ஓய்ந்(து) அமர்ந்ததோ?
உலர்ந்த அப்பளம்
ஒட்டிக் கொண்டதோ?

## 32. நகம்

குருத்தின் எலும்பு!
குருதிக் கண்ணூடி!
வருந்தாக் காதல்
வரிஎழுத் தாணியே!




## 33. புலவன்

தூய்மை, துணிவு
தொண்டு மனத்துடன்;
வாய்மை சொற்கலை
வளர்க்கும் வறியவன்!

## 34. தோழமை

உதவிக் காக
ஒன்றிப் பழகி;
பதவிக் காகப்
பகைத்துப் பிரிவதே!

## 35. நன்றி

கடத்தப் பட்டதோ
கைவிடப் பட்டதோ
அட!நம் நாட்டிலே
அரிதாய்ப் போனதே!

## 36. பொய்

சூதின் பிள்ளை!
சுயநல வேலி!
வாதிடு வோர்தம்
வாகைச் சூத்திரம்.

## 37. சோம்பேறி

முனைப்பில் லாதவன்!
முன்னில் லாதவன்!
'பனைப்புல் போலவே,
படைக்குத வாதவன்!

## 38. வரதட்சிணை

வாழ்க்கை அடிமைகள்
வாங்கும் பிணைப்பணம்;
தாழ்ந்த மனங்கள்
தண்டும் மணவரி!

## 39. வறுமை

நேரிய உழைப்பின்
நிரந்தரக் கூலி!
பாரினில் பாமரர்
பரம்பரைச் சொத்து

## 40. கல்லூரி

ஒட்டிக் கொள்ளும்
பட்டப் பதிப்பகம்!
மொட்டுக் கல்வி
கட்டவிழ் கழகமே!

## 41 சம்பளம்

முப்பது நாட்கள்
முடங்கிக் கிடந்து;
தப்பி வந்ததும்
தலைமறை வாவதே!




## 42. தலைவன்

தன்னல மறுப்பும்,
தளரா உறுதியும்;
மின்னெனத் தாக்கும்
மிடுக்கும் பெற்றவன்.

## 43. தொண்டன்

பிழைக்கும் தலைவர்
பேச்சில் மயங்கி;
உழைத்தே உயர்த்தி
ஒடுங்கிக் கிடப்பவன்!

## 44. கட்சிகள்

கொள்கையெனும் வேதத்தைக்
கொண்டாடும் புதுமதங்கள்!
துள்ளுகின்ற தலைவரையே
துதிக்கின்ற சாதிகளாம்!

## 45. கட்சிக் கொடிகள்

நிழலுக் குதவா
நெடிய மரத்தில்
அழகாய்ப் பறக்கும்
கொள்கைக் குருவிகள்!

## 46. தேர்தல்

வாக்கு வடையை
வாங்கிட நரிகள்;
ஊக்கி, உதவும்
உரைமழைக் காலம்!

## 47. பதவிகள்

அரசியல் வாதியின்
ஆசை நாயகி!
இரவல் அணிகள்!
இரவுதே வதைகள்!

## 48. கட்சி மாறிகள்

கொள்கை விதவைகள்!
கொடிநிழல் மாறிகள்!
அள்ளும் பதவி
ஆசை நாயகிகள்!

## 49. சர்வாதிகாரம்

நல்லார் கையில்
நறுக்கும் கத்தி!
அல்லார் கையில்
அதுவே கொடுவாள்!

## 50. சனநாயகம்

ஏய்ப்பவரை உயர்த்திடும்
ஏணிப் படிகள்!
வாய்ப்பறை யாளர்க்கு
வாய்த்தநல் லரங்கு!

## 51. அரசு அலுவலகம்

சுதந்திர நாட்டின்
நிரந்தர அடிமைகள்;
இதமென நினைத்தே
இருந்திடும் சிறையே!

## 52. அதிகாரி

எந்தக் கொம்பிலும்
ஏறிப் படரும்;
இந்த முல்லைகள்
இரவுக் குருவிகள்!

## 53. அரசுத் திட்டம்

அள்ளித் தெளித்த
புள்ளிக் கோலம்!
கிள்ளைப் பேச்சு!
கிழட்டுக் காதல்!

## 54. செய்தித்தாள்

நாற்றிசை நடப்பினை
நாட்டிற் பரப்பிடும்;
ஆற்றல் மிகுந்த
அச்சுக் கிருமிகள்!

## 55. நன்கொடை

அமைப்புகள் விதித்திடும்
அலங்கார வரிகள்!
சுமையாய் மாறிடும்
சுதந்திரத் தண்டலே!

## 56. சங்கம்

கடமை உணர்வைக்
கரையில் நிறுத்தி;
உரிமைப் படகில்
உலவும் அமைப்பே!

## 57. புரட்சி

கோரி அலுத்த
கொள்கை நெஞ்சின்
வீரிய வினையின்
விளைச்சல் அறுவடை!

## 58. சட்டம்

நீதியைப் பணத்தால்
நிறுக்கும் தராசு!
வாதிப் பவரின்
வலுவில் வளையும்!

## 59 சிறை

சட்டம் சமைத்த
குற்றக் கோட்டம்!
பட்டம் வழங்காப்
பல்கலைக் கழகம்!




60 வாழை

தலையையும் கொடுக்கும்
தாவரக் குமணன்!
இலையில் அசோகன்!
இடரில் இயேசு!

61. தென்னை

கொங்கைக் குலையுடை
மங்கை மரமிதன்;
அங்க வடுக்களே
ஆயுள் ரேகைகள்!

## 62. நெல்

உமியெனும் உறையுள்
உறங்கும் அரிசி!
அமுது மாத்திரை!
ஆருயிர் மருந்தாம்!

## 63. மணிலா

பூவைக் காட்டிக்
காயைப் பதுக்கும்,
சேவை வணிகர்
செயல்நேர் மணிலா!

## 64. வெங்காயம்.

சங்கு, சக்கரம்
இங்கெனும் பம்பரம்!
பொங்கும் சமையல்
புகழ்வெங் காயமே!

### 65 புல்

வெளிறிக் கிடக்கும்
வெற்று நிலப் பெண்;
குளிருக் காகக்
கொடுத்த கம்பளி!

### 66. முள்

தாவர ஈட்டிகள்!
தற்காப் பணிகள்!
காவல் அரண்கள்!
கடிமதிற் சேனைகள்!

### 67. வேப்பம் பழம்

காயில் கசக்கும்!
கனிந்தால் இனிக்கும்!
பாயிரத் தத்துவப்
பழமே வேம்பாம்!

## 68. முல்லை

மஞ்ச மலர்க்கணை!
மங்கையர் குழல்துணை!
விஞ்சும் விரைசுணை
வெண்மலர் முல்லையே!

## 69. மலர்

கொடியைக் காட்டிலும்
கொண்டையில் சிறக்கும்!
விடியலில் கருகி
விதவைபோ லொதுங்கும்!






70. விஞ்ஞானிகள்

ஆக்க ஆய்வின்
அறிவுப் பேழைகள்!
ஏக்க வேர்கள்!
எரியும் மெழுகுகள்!

71. வானொலி

தக்கார் யாரும்
தலைநீட் டாத
அக்கர கார
அந்தப் புரமே!

## 72. மின்சாரம்

கம்பியுள் பதுங்கிய
காந்தப் பூதம்!
அம்புவி கண்ட
அறிவியல் விளைச்சல்!

## 73. மின்விசிறி

மூன்று இறக்கைகள்
முளைத்த வௌவால்!
ஊன்றிச் சுழலும்
ஒருகால் நொண்டியே!

## 74. குழல் மின் விளக்கு

வாழைத் தண்டா?
வால்விண் மீனா?
தாழைக் குருத்தா
தண்ணொளிக் குழலே!

## 75. துப்பாக்கி

குண்டுப் புலிகளின்
குகை, துப் பாக்கிகள்!
மண்டிய சட்ட
மருட்டல் தூதுவர்!

## 76. திரைப்படம்

கள்ளினும் போதை
கவர்ச்சிக் காட்சி;
கொள்ளை நடத்தும்
கொடுங்கலை அரங்கே!

## 77. உரோகினி

அந்தக அரங்கில்
அரும்பொருட் களஞ்சியம்!
இந்தியர் பெருமையின்
ஈடில் இலச்சினை!

# விலங்கியல்



## 78. குயில்

கூடுகட்டக் கல்லாமல்
குரல்பெருமை கொண்டதுவே
பாடுவதில் பொருளில்லை
பகலிலவை அணுஇரவே!

## 79. சேவல்

உச்சிக் கொண்டையோ
உதய சூரியன்!
மெச்சும் தன்நடை
மிடுக்குறை கூவல்

80. காக்கை

பதுக்கத் தெரியாப்
பறவை நீக்ரோ!
ஒதுக்கல் உண்ணி!
ஊர்மலி காக்கைகள்!

81. குரங்கு

கட்சி அரசியல்
கலைகல் லாததால்
வெட்கும் மந்திகள்
வெறும்மரம் தாவுதே!

82. வண்ணத்துப் பூச்சி

ஈக்களைப் போலே
ஏமா றுமல்;
மாக்களி தேனை
மாந்தும் அழகி;

## 83. சிலந்தி

கண்ணிப் பொறிதனைக்
கண்ட விஞ்ஞானி!
நண்டின் போலியே
நாலிரு காலார்!

## 84. மீன்

நீந்தும் விழிகள்
நீர் புதை வெள்ளி!
மாந்தன் வயிரதன்
மயான பூமியாம்!

## 85. வேங்கை

வெடித்த பாகல்
விரிந்த வாய்க்குகை!
அடித்தே உண்ணும்
ஆண்மையின் சின்னம்!




## 86. கடவுள்

உருவகப் படுத்தி
உச்சியில் வைத்தது!
பொருள் பறிப் பார்க்குப்
பொருந்திய சாதனம்!

## 87. கனவு

உறங்கா எண்ண
உருவகக் காட்சிகள்!
மறவா வேட்கை
மனத்திரைப் படமே!

88. தீப்பெட்டி

அக்கினி முட்டையை
அடைகாக்கும் கோழி!
சக்கிக் கல்லின்
சார்ந்த வளர்ச்சியே!

89. அடுப்பு

புகையா வீட்டின்
புரட்சிப் புத்தகம்!
நகைக்கும் பருக்கை
நாட்டிய மேடை!

90. குடை

கரங்களில் முளைத்திடும்
கருந்துகிற் காளான்!
சரமழை வெய்யிலைச்
சந்திக்கும் கேடயம்!

91. இசை

உணர்வு நரம்பின்
உரசல் ஓசை!
புணரும் ஒலியிழைப்
போதைப் புனலே!

92. தங்கம்

பஞ்சைகள் தீண்டாப்
பார்ப்பன உலோகம்!
மஞ்சள் கயிற்றில்
மனைவி முத்திரை!

93. உப்பு

கடல்நீர்ச் சுண்டல்!
கரையும் வைரம்!
சுடர்மீன் குவியல்!
சுவைதரு முதலே!

## 94 சருக்கரை

விலையில் கசக்கும்!
விளைவில் இனிக்கும்!
அலைநுரைக் கன்னல்
அகநிலை மாற்றமே!

## 95. இட்டளி

அரிசி உளுந்து
அரைநாள் உறவில்
உருவெடுத் திட்ட
உணவுக் குழந்தை!

## 96. வெண் சுருட்டு

காரியம் முடிந்ததும்
காலில் மிதிபடும்!
பாரினில் எவர்க்கும்
பகைவெண் சுருட்டே!

## 97. அச்சம்

மென்மை நெஞ்சின்
மிடுக்கிலா உணர்வு!
தன்வலி தேரார்
தவிப்பே அச்சம்!

## 98 புதுக் கவிதை

நெல்லைச் சமைத்தே
நெய்பெய் தூட்டும்;
சொல்நய மறிந்தோர்
சோம்பற் சுவடுகள்!

## 99. இலக்கியம்

எவரும் படிப்பதாய்;
இன்பம் பயப்பதாய்த்
தவற்றினைத் திருத்திடும்
தகுதிபெற் றிருப்பதே!

100 நூறு

ஒழுக்க ஒன்றால்
உயர்ந்த சுன்னங்கள்!
இழுக்குறும், ஒன்றை
இழந்தால்; எண்ணுக!

